வீடமைப்பு, நிர்மாணம் மற்றும்
நீர் வழங்கல் அமைச்சு

நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

மின்னஞ்சல் முகவரி: info@cida.gov.lk
இணையதளம்: www.cida.gov.lk

CIDA

# வெற்றிடங்கள்

## நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கீழ் குறிப்பிடப்பட்ட பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## சிரேஷ்ட முகாமையாளர் பிரிவு – (HM 2-1)

### 1. பணிப்பாளர் நாயகம் பதவி

**தகைமைகள்**

***வெளிவாரி அபேட்சகர்கள்:***

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல்/ கட்டிடக்கலை/ கனிய அளவீடு துறையில் B.Sc. பட்டம்.

**அத்துடன்**

தொடர்புடைய துறையில் முதுமாணி பட்டம் அல்லது இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் (IESL)/ இலங்கை கட்டிடக்கலைஞர்கள் நிறுவனம் (SLIA)/ இலங்கை கனிய அளவையாளர் நிறுவனத்தினால் (IQSSL) அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய தொழில்முறை அமைப்பு ஒன்றின் நிறுவன அங்கத்துவம்.

**மற்றும்**

தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டத்தைப் பெற்ற பின்னர் “முகாமைத்துவ தரம்” ஒன்றில் பிரதான நிர்மாண செயற்பாடுகளின் அனைத்து பரந்த பகுதிகளில் குறைந்தது 20 ஆண்டுகள் அனுபவம், அதில் முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் CIDA இற்கு ஏற்க முடியுமான கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற வர்த்தக அமைப்பு ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவுடன் “சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில்” 05 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக அபேட்சகர்கள்**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல்/ கட்டிடக்கலை/ கனிய அளவீடு துறையில் B.Sc. பட்டத்துடன் தொடர்புடைய துறையில் முதுமாணி பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் முதுமாணி பட்டம் அல்லது இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் (IESL)/ இலங்கை கட்டிடக்கலைஞர்கள் நிறுவனம் (SLIA)/ இலங்கை கனிய அளவையாளர் நிறுவனத்தினால் (IQSSL) அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய தொழில்முறை அமைப்பு ஒன்றின் நிறுவன அங்கத்துவம்.

**அத்துடன்**

(a) பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் சிரேஷ்ட முகாமையாளர் (HM) பிரிவில் பணிப்பாளர் ஒருவராக குறைந்தது 07 ஆண்டுகள் அனுபவம்.

**மற்றும்**

(b) பல்துறை நிபுணர்கள் கொண்ட குழுக்களை திறம்பட வழிநடத்தி மற்றும் நிர்வகிக்கும் நிரூபிக்கப்பட்ட திறன். முறையான பணியமர்த்தல் மற்றும் மனித மற்றும் ஏனைய வளங்களின் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம்.

**சம்பள குறியீடு மற்றும் மாதாந்த சம்பள அளவு**

2025.03.25 ஆம் திகதிய 01/2025 ஆம் இலக்க MSD சுற்றுநிருபம்

HM 2-1-2025 Rs. [161,140 -12 x 4,850 - 219,340]

*(வெளிவாரியாக இணைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் சம்பள அளவின் ஆரம்பப் படியில் வைக்கப்பட்டுள்ளனர். முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2025 இற்கு அமைய, உள்ளக சம்பள படியில் செலுத்தப்படும் சம்பளம் ரூபா 140,317/- என்பதோடு 2027.01.01 ஆம் திகதி செலுத்தப்படும் சம்பளம் ரூபா 161,140/- ஆகும்.)*

**அனைத்து விண்ணப்பதாரர்களும்**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு மற்றும் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**வயது வரம்பு:**

35 வயதுக்கு குறையாத மற்றும் 55 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு மற்றும் தற்போது அரச/ சட்டரீதியான சபையில் கடமையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மேல் குறிப்பிடப்பட்ட உச்ச வயது பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு நடைமுறை**

நியமன நிர்வாகத்தினால் நியமிக்கப்படும் குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை.

**வேறு நன்மைகள்**

- அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்.
- ஊழியரின் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு நிறுவனத்தினால் 15% பங்களிப்பும், ஊழியரிடம் இருந்து 10% பங்களிப்புடனும் நிறுவனத்தினால் ஊழியருக்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% வீதமும் இடப்படும்.
- “அக்ரஹார தங்க” மருத்துவ காப்புறுதி வசதி நிறுவனத்தினால் பெற்றுத்தரப்படும்.
- பொது நிறுவன சுற்றுநிருபத்திற்கு (PED) அமைய, போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் வசதிகள் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பதாரரின் சுயவிபரக்கோவை அடங்கிய, முறையாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, கல்வி மற்றும் தொழில், அனுபவம் தொடர்பில் உறுதி செய்யப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு 2026.07.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவருக்கு கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும். அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபை/ நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள், தமது திணைக்களம்/ நிறுவன தலைவர்களின் பரிந்துரையுடன், அவர்கள் தேர்வு செய்யப்பட்டால் தற்போது வகிக்கின்ற பதவியில் இருந்து விடுவிப்பதற்கு முடியுமா என்பதைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

முழுமை பெறாத அல்லது தாமதித்துக் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகைமையை பூர்த்தி செய்திருக்கும் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**தலைவர்**
**நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**
**‘சவ்சிரிபாய’ 123, விஜேராம மாவத்தை,**
**கொழும்பு-07.**